**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI**
**OS No. 4/2021**

2025ம் வருடம் ஜுலை திங்கள் 04ம் நாள் 1வது சாட்சியத்தின் குறுக்கு விசாரணை வாக்குமூலம் 1873ம் ஆண்டு 10வது விதியின் படி திரு. V.மனோஜ்குமார், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் : திருமதி. வாசுகி (PW1) கிராமம்:
கணவர் பெயர் : சபாபதி தொழில் :
வயது :

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:–

1. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தின் பத்தி 8ல் 2ம் பிரதிவாதி நீதிமன்ற உத்தரவை மீறி தாவா சொத்தினை ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டி வருவதை நான் ஊர்ஜிதம் செய்து கொண்டதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். அதனால் 2ம் பிரதிவாதி மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப் போவதாக நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

2. 2ம் பிரதிவாதி மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 2ம் பிரதிவாதி நீதிமன்ற உத்தரவை மீறி கட்டிடம் எதுவும் தாவா சொத்தில் கட்டவில்லை என்பதால் அவர் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தற்போது வரை நான் தொடரவில்லை என்றால் சரியல்ல. அவர்கள் கட்டிடம் கட்டி இருப்பது உண்மை தான். எனது வழக்கறிஞரிடம் இதுபற்றி கூறியுள்ளேன். அவர் நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துள்ளார்.

3. 1,2 எதிர்வாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை படித்து பார்த்தேனா என்றால் ஆமாம் படித்து பார்த்தேன். நான் வாதுரையில் (plaint) தாவா சொத்தில் 3ல் 1 பாகம் கோரியிருப்பதை எதிர்வாதிகள் அவர்களது எதிர்வழக்குரையில் மேற்படி பரிகாரத்தை கொடுப்பதில் ஆட்சேபணை இல்லை என்று தெரிவித்துள்ளார்கள் என்றால் சரிதான். எனக்கும், 1,2 பிரதிவாதிகளுக்கும் நெடுங்குளம் கிராமத்தில் சொந்தமாக வீடு உள்ளதா என்றால் இல்லை.

4. எனது அப்பா அம்மா வாழ்ந்த ஊரான நெடுங்குளத்தில் எங்களுக்கு சொந்தமாக வீடு இல்லை என்பதால் தான் எனது அம்மாவின் பெயரில் இருந்த

சொத்தில் 2ம் பிரதிவாதி அவரது பாகத்தில் மட்டும் வீடு கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. வழக்கின் தாவா சொத்துக்களின் விபரம் எனக்குத் தெரியும்.தாவா சொத்தில் 8,9,10 ஆகிய இலக்கச் சொத்துக்களின் சர்வே எண். 55 என்றால் சரிதான். மேற்படி 8,9,10 ஆகிய சொத்துக்களுக்கு மேல்புறத்தில் கமுதி செல்லும் பிரதான சாலை உள்ளது என்றால் சாலை உள்ளது. அது சொத்துக்களுக்கு நடுவில் செல்கிறது. 8,9,10 ஆகிய சொத்துக்களுக்கு வடபுறம் நெடுங்குளம் செல்லும் சாலை உள்ளது என்றால் சரிதான். தென்புறத்தில் அரசு பள்ளி உள்ளது என்றால் சரிதான். கீழ்புறம் சிங்கனன் சேர்வை அவர்களுக்கு பாத்தியப்பட்ட சர்வே எண். 125 சொத்து உள்ளது என்றால் சரிதான்.

5. சர்வே எண். 55 கொண்ட 8,9,10 இலக்கச் சொத்துக்களின் சில பகுதிகளை அரசாங்கத்தினர் சாலைக்காக கையகப்படுத்தியுள்ளார்கள் என்றால் சரிதான். அவ்வாறு கையகப்படுத்தியதால் சர்வே எண். 55 சொத்தை வருவாய் துறையினர் புதிய சர்வே எண்களாக 55/6b, 55/6c மற்றும் 55/7 என்று புதிய சர்வே எண்கள் வழங்கியுள்ளார்கள் என்றால் சரிதான்.

6. மேற்படி 8,9,10 ஆகிய சொத்துக்கள் அருகருகே ஒரே சொத்துக்களாக உள்ளது என்றால் சரிதான். பொதுவாக கிராமத்தில் வசிப்பவர்கள் ஒரு சொத்தை தென்வடலாக குடும்பத்திற்குள் பிரித்தால் மூத்த பிள்ளைக்கு தெற்கு பக்கம் கொடுப்பது வழக்கம் என்றால் சரியல்ல. கிழமேற்காக தான் பிரிப்பார்கள். மேற்கு பக்கம் மூத்த பிள்ளைக்கு கொடுப்பார்கள். தாவா சொத்தை பொறுத்து கிழமேற்காக பிரிக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. பிரிக்கலாம். சர்வே எண் 55/6b க்கு தெற்கு பக்கம் சர்வே எண். 55/7 உள்ளது என்றால் சரிதான்.

7. நீதிமன்ற ஆணையர் இடத்தை பார்வையிட்டு தாக்கல் செய்துள்ள வரைபடத்தில் சர்வே எண். 55/6b க்கு தெற்கு பக்கம் பள்ளிக்கூடம் உள்ளது என்று சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான் சாட்சி கூறிவிட்டு பின்னர் பள்ளிக்கூடத்தின் ஒரு பகுதி தெற்குபுறம் இருப்பதால் கூட ஆணையர் அவ்வாறு குறிப்பிட்டு இருக்காலம் என்று கூறினார். சர்வே எண். 55/6b க்கு தெற்கு பக்கம் சர்வே எண். 55/7 மட்டுமே உள்ளது என்றாலும் நான்

வழக்கிற்காக பள்ளிக்கூடத்தின் பகுதி இருப்பதாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. சர்வே எண். 55/7 க்கு தென்புறம் அரசு பள்ளி உள்ளது என்றால் சரிதான்.

8. இந்த உரிமையியல் வழக்கு நிலுவையில் இருந்த போது தாவா சொத்தில் 2ம் பிரதிவாதி கட்டிடம் எழுப்பும் போது நான் சென்று 2ம் பிரதிவாதியிடம் கேட்டதாகவும், அப்போது 2ம் பிரதிவாதி என்னை மிரட்டியதாக கூறி கடந்த 06.02.2023ம் தேதி மண்டலமாணிக்கம் காவல்நிலையத்தில் புகார் அளித்ததாக நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எனது புகாரின் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதா என்று எனக்குத் தெரியாது. நான் கூறிய படி 2ம் பிரதிவாதி என்னை மிரட்டவில்லை என்பதால் தான் போலீசார் 2ம் பிரதிவாதி வழக்கு பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல.

9. தாவா 8,9,10 லக்கச் சொத்துக்களின் மொத்த விஸ்தீரணம் 108 சென்ட் என்றால் எனக்கு அதுபற்றி சரியாக தெரியவில்லை. 108 சென்ட் – ஐ 3 பங்காக பிரித்தால் தலா ஒருவருக்கு 36 சென்ட் கிடைக்கும் என்றால் சரிதான். நான் கூறிய படி எனக்கு பாகப்பிரிவினை வரும் சொத்தில் 2ம் பிரதிவாதி கட்டிடம் கட்டவில்லை என்றாலும், அவர் பங்கில் தான் கட்டிடம் கட்டி வருகிறார் என்றாலும் சரியல்ல. தாவா சொத்து தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

(ஒம்./–திருமதி. G. தங்க கார்த்திகா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.